New Agricultural Colleges

* 16 Q.—THIRU S. SANGUMUTHU THEVAR: Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(a) whether the Government have decided not to open any new Agricultural College in this State during the year 1972-73; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. அ. பெ தர்மலிங்கம்: (அ) & (இ) நடப்பாண்டில் இம்மாநிலத்தில் வேளாண்மைக் கல்லூரி ஒன்றைத் தொடங்குவது குறித்த செயற்குறிப்பு எதுவும் தற்போது அரசிடம் இல்லை.

Agricultural Productivity Council

* 17 Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Agriculture be pleased to state the details of the composition of the Farm Productivity Council?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: இவ்வினா, தமிழ்நாடு வேளாண்மை உற்பத்திப் பெருக்க மன்றத்தைப் பற்றியது என்று கருதப்படுகிறது. ஏனெனில், பண்ணை உற்பத்திப் பெருக்க மன்றம் என்று எதுவும் இம்மாநிலத்தில் இல்லை. சென்னையைத் தலைமையிடமாகக் கொண்டு தமிழ்நாடு வேளாண்மை உற்பத்திப் பெருக்க மன்றத்தை நிறுவ அரசு முடிவு செய்துள்ளது. முதலமைச்சர், அதன் தலைவராகவும், வேளாண்மைத் துறை அமைச்சர் துணைத் தலைவராகவும் இருப்பர்.

இம்மன்றத்தின் அமைப்பு பற்றி இன்னும் முடிவு செய்யப்படவில்லை. இதுபற்றி தற்பொழுது அரசு கவனித்து வருகிறது.

Kitchen gardens

* 18 Q.—THIRU S. SANGUMUTHU THEVAR: Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(a) whether it is a fact that the scheme for the promotion of Kitchen Gardens has been implemented in Madras City; and

(b) if so, the details thereof?